நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 நாகப்பட்டினம்

வழக்கு எண் : CC 588–2021

வழக்கு சாட்சி : PW 8 LW13

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேந்திரன் | ஜாதி | : |
| த/ பெயர் | : கணேசன் | தொழில் | : காவல் ஆய்வாளர், ஜெகதாப்பட்டினம் |
| கிராமம் | : ஜெகதாப்பட்டினம், புதுக்கோட்டை மாவட்டம் | சமயம் | : |
| தாலுக்கா | : | வயது | : 56/2026 |

Solemnly affirmed in accordance with the provision of Oaths Act, 1969 (Act 44 of 1969), of the day of **22.05.2026**

1 வது எதிரி ஆஜர், சட்டப்பிரிவு 317 Cr.P.C மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் விசாரணை.

<u>முதல் விசாரணை</u>

1. நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 24.12.2020 ம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளராக பணிசெய்தபோது, மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட, 185/2020 C.No G3/14507/2020 நாள் 30.11.2020 தேதியிட்ட புகாரினை பெற்று, குற்ற பிரிவு உதவி ஆய்வாளர் அவர்களால், நிலைய குற்ற.எண்.10/2020 பிரிவு 406, 420,418, 465, 467, 471 இதச வின் படி வழக்கு பதிவு செய்து, எனக்கு மேல்விசாரணைக்கு வைக்கப்பட்டது. மேல்விசாணைக்கு எடுத்துக்கொண்ட நான் அன்றைய தினமே சம்பவ இடம் சென்று, சாட்சிகள் ஆனந்தராஜ், கலைமணி, அபிநயா, ஜெயசுதா ஆகியோரிடம் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன்.

2. அவர் ஆஜர் செய்த புகார்தாரர் ஆனந்தராஜ் பெயரில் எதிரிகளால் வழங்கப்பட்ட ரூ.6, 25000/– அதற்குண்டான பாண்டு பத்திரம், (ரூ 50,000 பத்திரம்X 9, ரூ. 75,000 பத்திரம் X2, ரூ.25,000 பத்திரம்X1 ஆகக் கூடுதல் ரூ. 6,25,000/–) வழக்கு ஆவணங்களையும், கைப்பற்றினேன். அவர் மனைவி கலைமணி பெயரில் ரூ50,000/– பத்திரம் X8, ரூ.25,000/–பத்திரம் X2, ரூ.75,000/–பத்திரம் X 1, ரூ.60,000/– பத்திரம் X1,

ரூ.40,000/– பத்திரம் X1, ஆகக் கூடுதல் ரூ.6,25,000/–, மொத்தம் ரூ.12,5000/– பிறகு Share ஆனந்ராஜ் என்பவருடைய பெயரில் கொடுத்துள்ள Share Certificate ஐ கொடுத்து , பின்னர் எதிரி நிறுவனத்தால் ஆனந்ராஜ் என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த, SB Passbook அசல், மேலும் ஆனந்ராஜ்–க்கு வழங்கப்பட்டிருந்த Recoring Deposite Pass book அசல், மேலும் ஆனந்த்ராஜ்க்கு வழங்கப்பட்ட, உறுப்பினர் அடையாள அட்டை– அசல் ஆகியவற்றை பெற்று தாக்கல் செய்தேன். மேற்படி **ஆவணங்கள் அ.சா.ஆ. 2 முதல் 7 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

3. பிறகு 21.12.2020ம் தேதி 11.00 மணிக்கு வழக்கின் எதிரிகளான, ஜெயசேதுராமன், பாலுமுருகன் ஆகியோர்களை வடக்கு பொய்கைநல்லூர் திரௌபதிஅம்மன் கோவிலில் இருந்தவர்களை, காரணம் கூறி கைது செய்தும், 12.00 மணிக்கு நிலையம் வந்தோம், எதிரி பாலமுருகன் தானாக முன்வந்து கொடுத்த வாக்குமூலத்தினை சாட்சிகள், சீனிவாசன் மற்றும் சிங்காரவேலம் ஆகியோர்கள் முன்னிலையில், 12.15 முதல் 13.15 மணி வரை பதிவு செய்தும் பின்பு எதிரி பாலமுருகன் என்பவர் தனாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை அதே சாட்சிகள் முன்னிலையில் 13.30 முதல் 14.30 வரை பதிவு செய்தேன். பிறகு எதிரிகளை சட்டப்படி காவலுக்கு உட்படுத்தினேன், பிறகு 26.12.2020 ம் தேதி சாட்சிகள் சூர்யா, நாகூர் கனி, சலீம், அப்துல்காதர், ஜெயபால் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு 08.03.2023 ம் தேதி மாதிரிகுற்ற அறிக்கை பெற்றும், வழக்கின் சட்டப்பிரிவை, பிரிவு 406, 420, 418, 465, 467, 471 லிருந்து 406, 420, 468, 471 ஆக மாற்றம் செய்து அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். மேற்படி **சட்டப்பிரிவு மாற்றுஅறிக்கை அ.சா.ஆ.23 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. பிறகு 28.03.2021 ம் தேதி உதவிஆய்வாளர் திருஞானம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு 10.03.2021ம் தேதி எனது விசாரணையை முடித்து, எதிரிகள் மீது 406, 420, 468, 471 இதச பிரிவின் படி குற்றம் என, குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்

JAYANDRAN ANNSRAJA
Digitally signed by JAYANDRAN ANNSRAJA
Date: 2026.05.22 15:22:58 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,

நாகப்பட்டினம்.